www.Padasalai.Net www.CBSEtips.in

12 - ஆம் வகுப்பு **காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022** பதிவு எண்.

காலம் : 3.00 மணி MDQ **வணிகவியல்** மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுத மற்றும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி I

குறிப்பு:1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 20x1=20

2) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்

1. வேலையை பல்வேறு சிறு பணிகளாகப் பிரிப்பதை --------- என்பர்.
அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்

2. முதல் நிலைச் சந்தை ------- எனவும் அழைக்கப்படுகிறது. அ) இரண்டாம் நிலைச்சந்தை
ஆ) பணச்சந்தை இ) புதிய வெளியீடுகளுக்கான சந்தை ஈ) மறைமுகச் சந்தை

3. NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு அ) 1990 ஆ) 1992 இ) 1998 ஈ) 1997

4. பணச்சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு -------
அ) வணிகவங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

5. பங்கு பரிமாற்றகங்கள் பரிவர்த்தனை செய்வது ------- ஆகும்.
அ) சரக்குகள் ஆ) சேவைகள் இ) நிதி ஆவணங்கள் ஈ) நாட்டின் செலாவணி

6. இந்தியாவில் மூலதனச் சந்தையை கட்டுப்படுத்த எந்த ஆண்டு செபி நடைமுறைப்படுத்தபட்டது
அ) 1988 ஆ) 1992 இ) 2014 ஈ) 2013

7. மனித வளம் என்பது ஒரு ------ சொத்து
அ) கண்ணுக்குப் புலனாகும் ஆ) கண்ணுக்குப் புலனாகாத இ) நிலையான ஈ) நடப்பு

8. விளம்பரம் என்பது ஒரு ---- ஆட்சேர்ப்பு வளமாகும்.
அ) அக வளங்கள் ஆ) புற வளங்கள் இ) முகவர் ஈ) புறத்திறனீட்டல்

9. --------- வேலை தேடுவோரை அடையாளம் மற்றும் ஈர்ப்பதில் செயல்முறை என்பதைக் குறிக்கிறது.
அ) தேர்வு ஆ) பயிற்சி இ) ஆட்சேர்ப்பு ஈ) தூண்டுதல்

10. ----------- ஊழியர்களின் திறமை குறைபாடுகளைத் தடுக்க உதவுகிறது
அ) பயிற்சி ஆ) வேலை பகுப்பாய்வு இ) தேர்வு ஈ) ஆட்சேர்ப்பு

11. உடனடிச் சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது?
அ) பொருட்கள் ஆ) பரிவர்த்தனை இ) ஒழுங்குமுறை ஈ) காலம்

12. சந்தையில் உயர் நிலையில் இருப்பவர் யார்? அ) வாடிக்கையாளர் ஆ) விற்பனையாளர்
இ) மொத்த விற்பனையாளர் ஈ) சில்லறை விற்பனையாளர்

13. சமூக சந்தைப்படுத்துதல் என்பது -------- யுடன் தொடர்புடையது.
அ) சமூகம் ஆ) சமூக வகுப்பு இ) சமூக மாற்றம் ஈ) சமூக தீமை

14. சரக்கு விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு அ) 1962 ஆ) 1972 இ) 1930 ஈ) 1985

15. நுகர்வோரின் பொறுப்பு என்பது அவர் பெற்றுள்ள ------ ஆவணமே பொருட்களை வாங்கியதற்கான அடையாளமே .அ) ரொக்க ரசீது ஆ) உத்தரவாத அட்டை இ) இடாப்பு ஈ) மேற்காணும் அனைத்தும்

16. கூற்று : அ) விதிவிலக்கு மேலாண்மை என்பது அமைப்பிலுள்ள ஒவ்வொரு பணியாளரும் ஈடுபாட்டோடும் திறமையாகவும் பங்கேற்கும் ஒரு மேலாண்மை செயல்முறை ஆகும்.
காரணம் : ஆ) அமெரிக்காவில் ஜார்ஜ் ஒடியோர்ன் என்பவரால் பிரபலப்படுத்தப்பட்டது.
i) அ மற்றும் ஆ இரண்டும் சரி. மேலும் ஆ என்பது அ என்பதற்கு சரியான விளக்கம்
ii) அ மற்றும் ஆ இரண்டும் சரி ஆனால் ஆ என்பது அ விற்கு சரியான விளக்கம் அல்ல
iii) அ என்பது சரி ஆனால் ஆ என்பது சரியல்ல. iv) அ என்பது சரியல்ல அனால் ஆ என்பது சரி

17. சரியான வாக்கியத்தை தேர்ந்தெடுக்கவும்
1. ஒரு வருட காலத்திற்குள் முதிர்வடையும் நிதிச் சொத்துக்களை பணச் சந்தை கையாள்கிறது
2. வணிக வங்கிகள் பணச்சந்தையில் பெரும் பங்காற்றுகிறது.
3. பணச்சந்தை ஒரு ஒற்றைத்தன்மையுள்ள சந்தை
(அ) 1 சரி (ஆ) 2 சரி (இ) 1 மற்றும் 2 சரி (ஈ) 1 மற்றும் 3 சரி

18. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும் அ) பணி சுழற்சி முறை
ஆ) குழு ஒதுக்கீட்டு முறை இ) மின்னணு கற்றல் முறை ஈ) பயிற்சியளிப்பு முறை



Scanned by TapScanner
Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

19. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்

| | |
|---|---|
| அ) NSE | தேசிய பங்குச்சந்தை |
| ஆ) SHCIL | இந்திய வைப்பு கழகம் வரையறுக்கப்பட்டது |
| இ) STCI | குறுகிய கால பத்திரங்கள் வர்த்தக கழகம் |
| ஈ) NSDL | தேசிய கடன்பத்திர நிறுவனம் வரையறுக்கப்பட்டது |

20. தவறான இணையைத் தேர்ந்தெடுக்கவும்

| | |
|---|---|
| அ) கருவூல இரசீதுகள் | பண மேலாண்மை |
| ஆ) வைப்பு சான்றிதழ்கள் | அயல்நாட்டு இரசீதுகள் |
| இ) வணிக இரசீதுகள் | மேல் எழுதுபவர் |
| ஈ) அரசு பத்திரங்கள் | தங்க முனைப் பத்திரங்கள் |

## பகுதி – II

குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் .அவற்றில் வினா எண் 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும் . 7 x 2 = 14

21. மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக .
22. OTCEI – சிறுகுறிப்பு வரைக
23. இந்தியாவில் உள்ள ஏதேனும் 5 பங்குச்சந்தைகளைப் பற்றி எழுதுக.
24. பதவி உயர்வு என்றால் என்ன ?
25. சந்தையிடுகையாளர் வரைவிலக்கணம் தருக.
26. பசுமைச் சந்தையிடல் என்றால் என்ன ?
27. நுகர்வோரியல் என்பதை வரையறு .
28. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986 பற்றி சிறுகுறிப்பு வரைக.
29. ஜான் F கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை ?
30. நிரந்தர கணக்கு எண் (PAN) என்றால் என்ன?

## பகுதி – III

குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் .அவற்றில் வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும் 7 x 3 = 21

31. மேலாண்மையின் முதன்மைப் பணிகளைப் பட்டியலிடுக .
32. இரண்டாம் நிலைச் சந்தை பற்றிக் குறிப்பு வரைக.
33. வைப்புச் சான்றிதழ்களின் சிறப்பியல்புகள் யாவை ?
34. காளை,கரடி பற்றி விவரி.
35. புறத்தோற்றமற்ற கணக்கு என்றால் என்ன ?
36. மனித வள மேலாண்மையின் வரைவிலக்கணம் தருக.
37. ஆட்சேர்ப்பு முறையில் கோரப்படாத விண்ணப்பங்கள் என்றால் என்ன ?
38. மின் சந்தையிடுதலின் நோக்கங்கள் யாவை ?
39. நிவாரணத்திற்க்கான உரிமைகள் பற்றி நீவிர் அறிந்தது என்ன ?
40. சிறு குறிப்பு வரைக : கொரில்லா சந்தையிடுதல்

## பகுதி – IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 7 x 5 = 35

41. நவீன மேலாண்மையின் கோட்பாடுகளை விவரி . *(அல்லது)* நுகர்வோரின் பொறுப்புகள் யாவை ?
42. முதல் நிலைச்சந்தை மற்றும் இரண்டாம் நிலைச்சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகளை விவரி . *(அல்லது)* நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள் ?
43. மூலதனச் சந்தையின் பல்வேறு பணிகளை விளக்குக. *(அல்லது)* ஆட்சேர்ப்பு முறையில் உள்ள புறவளங்களை விளக்குக.
44. பணச்சந்தை மற்றும் மூலதனச் சந்தை இரண்டிற்கும் இடையேயான வேறுபாடுகளை விவரி . *(அல்லது)* ஆட்சேர்ப்பு முறைக்கும் தேர்ந்தெடுத்தலுக்கும் இடையேயான வேறுபாடுகளை விவரி.
45. பங்குச்சந்தை –பொருட்கள் பரிமாற்றம் வேறுபாடு காண். *(அல்லது)* பணிவழி பயிற்சிக்கும் பணிவழியற்ற பயிற்சி முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?
46. செபியின் அதிகாரங்களை விவரி . *(அல்லது)* மின்னணு சந்தையிடுதலின் நன்மை தீமைகளை விளக்குக
47. மனித வளத்தின் தனிப்பட்ட சிறப்பியல்புகளை விளக்குக . *(அல்லது)* பொருளாதார அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன ?



Scanned by TapScanner
Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**+2 வணிகவியல் காலாண்டுத் தேர்வு செப் - 22**

**சரியான விடை**

1. (இ) வேலைப்பகிர்வு
2. (இ) புதிய வெளியீடுகளுக்கான சந்தை
3. (ஆ) 1992
4. (அ) வணிக வங்கி
5. (இ) நிதி ஆவணங்கள்
6. (ஆ) 1992
7. (ஆ) கண்ணுக்குப் புலனாகாத
8. (ஆ) புற வளங்கள்
9. (இ) ஆட்சேர்ப்பு
10. (அ) பயிற்சி
11. (ஆ) பரிவர்த்தனை
12. (அ) வாடிக்கையாளர்
13. (ஆ) சமூக வகுப்பு
14. (இ) 1930
15. (அ) ரொக்க ரசீது
16. (iii) அ என்பது சரி ஆனால் ஆ சரியல்ல
17. (இ) 1 மற்றும் 2 சரி
18. (இ) மின்னணு கற்றல் முறை
19. (அ) தேசிய பங்குச் சந்தை
20. (ஆ) வைப்பு சான்றிதழ்கள் - அயல்நாட்டு ரசீதுகள்

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. மேலாண்மைக் கருவிகள்:** கணக்கியல், வணிகச்சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியியல், தரவுச் செயலாக்கம்

**22. OTCEI:** பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே OTCEI என்பதாகும்.

**23. இந்தியாவில் உள்ள ஏதேனும் 5 பங்கு சந்தைகள்:** தி பாம்பே பங்குச் சந்தை, பெங்களூர் பங்குச் சந்தை லிமிடெட், சென்னை பங்குச் சந்தை லிமிடெட், புனே பங்குச் சந்தை லிமிடெட், கனரா பங்குச் சந்தை லிமிடெட்,

**24. பதவி உயர்வு:** பணி மூப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில் பணியாளர்களை நிறுவன அமைப்பில் கீழ்மட்ட நிலையிலிருந்து மேல்மட்ட நிலைக்கு சென்று பணிபுரிய அளிக்கப்படும் வாய்ப்பு பதவி உயர்வு ஆகும்.

**25. சந்தையிடுகையாளர் வரைவிலணக்கம் தருக. தொழில் அகராதியின்** கூற்றுப்படி "யார் ஒருவர் ஒரு குறிப்பிட்ட நுகர்வோருக்கான பண்டங்கள் மற்றும் பணிகளின் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் நிறுவனங்கள் சார்பாக பண்டங்கள் மற்றும் பணிகளை சந்தையிடுகை செய்கிறாரோ அவரே சந்தையிடுகையாளர்" ஆவார்.

**26. பசுமைச் சந்தையிடுதல்:** சுற்றுச் சூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாத வகையில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதை பசுமைச் சந்தைப்படுத்தல் எனப்படும்.

**27. நுகர்வோரியியல்** என்பது விற்பனையாளரிடமிருந்து தங்களது உரிமைகளையும் அதிகாரங்களையும் மேம்படுத்தும் முயற்சியாகும் **-எல்.மெஸ்ஸி**

**28. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986** இச்சட்டம் சுருக்கமாக கோப்ரா (COPRA) என்றழைக்கப்படுகிறது. இச்சட்டம் 15.04.1987 அன்றே அமுலுக்கு வந்தது, இச்சட்டம் 1993ல் திருத்தியமைக்கப்பட்டது. நுகர்வோர் நலனைப் பாதுகாப்பதை முக்கிய நோக்கமாக கொண்டது.

**29. ஜான். F. கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள்:** பாதுகாப்பில் உரிமை, தகவல் பெறும் உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை, கேட்கும் உரிமை

**30.PAN –** நிரந்தர கணக்கு எண் என்பது நேரடி வரிகள் வாரியம் அதாவது வருமான வரித்துறையினால் வழங்கப்படும் 10 இலக்க எண்ணெழுத்து அடையாள புகைப்பட அட்டையாகும்

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. மேலாண்மையின் முதன்மைப் பணிகள்:** திட்டமிடல், அமைப்பாற்றல், பணியமர்த்தல், இயக்குவித்தல், செயலூக்கமளித்தல், கட்டுப்படுத்துதல், ஒருங்கிணைத்தல்.

**32. இரண்டாம் நிலைச் சந்தை** ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை ஆகும்.

இதில் பங்கு மாற்றகம் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும்.

நிதி கோருதலின் வெளியீட்டுக் கால அடிப்படையில் செயல்படும்.

**33. வைப்புச் சான்றிதழின் இயல்புகள்:** கால வைப்புக்கான உரிமை ஆவணம், பிணையமற்ற மாற்று முறை ஆவணங்கள், முக மதிப்பிலிருந்து வட்டத்தில் வெளியிடுதல்.

**34. காளை:-** பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை அல்லது தெஜிவாலா என்று அழைக்கப்படுகிறார். இவர் எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் மனப்பாங்கு கொண்டவர்.

**கரடி:-** எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர். கரடி அல்லது மண்டிவாலா என்று அழைக்கப்படுகிறார். இவர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.

**35. புறத் தோற்றமற்ற பத்திர கணக்கு** நிறுமம் பதிவாளரால் காகித வடிவிலான பங்குச்சான்றிதழை அழித்து புறத்தோற்றமில்லா பத்திரங்களாக மாற்றி அவை முதலீட்டாளர் கணக்கில் பராமரிக்கப்படுவதே புறத்தோற்றமற்ற பத்திரக்கணக்கு எனப்படும்.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**36. மனித வள மேலாண்மையின் வரைவிலக்கணம்** மனிதவள மேலாண்மை என்பது நிர்வாக செயல்பாட்டின் ஒரு பகுதியாகும். மேலும் அவை ஒரு நிறுவனத்தின் மனிதக் கூறுகளை முதன்மையாகக் கருத்தில் கொண்டுள்ளது. **EFL ப்ரெச்.**

**37. ஆட்சேர்ப்பு முறையில் கோரப்பாடாத விண்ணப்பங்கள்:**நிறுவனங்கள் காலிப்பணியிடங்கள் குறித்த எவ்வித அறிவிப்பும் செய்யாத நிலையில் வேலை தேடுவோர் தன்னிச்சையாக வேலைவேண்டி விண்ணப்பித்த விண்ணப்பங்களை கோரப்படாத விண்ணப்பங்கள் ஆகும்.

**38. மின்சந்தையிடுதலின் நோக்கங்கள்:** சந்தையின் பங்கை விரிவாக்கம் செய்தல். வழங்கீடு மற்றும் விற்பனை மேம்பாட்டு செலவுகளைக் குறைத்தல், பொருள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல். தகவல் தளத்தை பலப்படுத்துதல்.

**39. நிவாரணத்திற்கான உரிமைகள் பற்றி நீவிர் அறிந்தது என்ன?** பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய காலத்திற்குள் இழப்பீடு வழங்க வேண்டும்.

நுகர்வோரின் புகார்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளை உடனடியாக சரி செய்ய வேண்டும்.

**40.கொரில்லா சந்தையிடுதல்:** வழக்கத்திற்கு மாறான முறையில் வாடிக்கையாளரின் கவனத்தை ஈர்பது. பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களான சந்தை, பெரிய விற்பனை கூடங்கள், பூங்கா மற்றும் கடற்கரை போன்ற இடங்களில் திடீரென குறிப்பிட்ட நிறுவனத்தின் அடையாளம் கொண்ட ஆடையை அணிந்து கொண்டு தோன்றி வாடிக்கையாளர்களுக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்துதல்

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகள்:**

**வேலைப்பகிர்வு:-** தொழிலமைப்பின் மொத்த பணிச்சுமையும் பகிர்வு செய்யப்பட வேண்டும்.

**ஒழுங்குமுறை:-** கீழ்படிதல் முறைப்படி நடத்தல், அதிகாரத்தை மதித்தல் ஆகியவை நிறுவனம் நன்கு நடைபெற அவசியம் ஆகும்.

**கட்டளையொருமை:-** ஒவ்வொரு கீழ் பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரிடமிருந்து மட்டுமே கட்டளைகளை பெற வேண்டும்.

**ஆணையுரிமை வரிசை:-** ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும்.

**ஊதியம்:-** ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும்.

**41.ஆ) நுகர்வோரின் பொறுப்புகள்**

விற்பனை ஒப்பந்தப்படி பொருளுக்கான விலையை நுகர்வோர்கள் செலுத்த வேண்டும்.

விலை செலுத்தியவுடன் உரிய நேரத்தில் உரிய இடத்தில் பொருட்களைப் பெற்றுக் கொள்வது நுகர்வோரின் பொறுப்பாகும்.

குறித்த நேரத்தில் நுகர்வோர் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் அதனால் ஏற்படும் நட்டத்திற்கே அவரே பொறுப்பாகும்.

நுகர்வோர் வாங்கியப் பொருட்களை அதன் விதிமுறை செயல்முறைக்கேற்ப முன்னெச்சரிக்கையுடன் பயன்படுத்த வேண்டும்.

நுகர்வோர் பொருட்களை வாங்கும் போது விற்பனையாளரிடமிருந்து ரொக்க இரசீது பெற வேண்டும்.

| 42.அ. அடிப்படை | முதல்நிலைச் சந்தை | இரண்டாம் நிலைச் சந்தை |
|---|---|---|
| பொருள் | புதிய பங்குகளுக்கான சந்தை | முன்னரே வெளியிட்ட பங்குகளுக்கான சந்தை |
| கொள்முதல் | நேரடி | மறைமுகம் |
| விற்கும் முறை | ஒரு முறை | பல முறை |
| ஆதாயம் பெறுபவர் | நிறுமம் | முதலீட்டாளர்கள் |
| விலை | நிலையான விலை | தேவை அளிப்பை பொறுத்து மாறும் |

**42.ஆ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்?**

**அதிகவிலைக்கு விற்றல்:-**பொருளின் விலையைவிட கூடுதலானவிலையில் விற்று நுகர்வோரை ஏமாற்றுகின்றனர்.

**கலப்படம்:-** உணவுப் பொருட்களில் உடலுக்கு கேடு செய்யும் பொருட்களை இலாபத்துக்கு ஆசைப்பட்டு கலப்படம் செய்கின்றனர்.

**போலியான பொருட்கள்:-** மக்கள் மத்தியில் பிரபலமாக உள்ள பொருட்களை போலியாக செய்து விற்று நுகர்வோர்களை ஏமாற்றுகின்றனர்.

**செயற்கை பற்றாக்குறை:-** வியாபாரிகள் பொருட்களை இருப்பு வைத்துக் கொண்டு இருப்பு இல்லை என செயற்கைப் பற்றாக்குறையை ஏற்படுத்தி இலாபம் ஈட்டுகின்றனர்.

**தரக்குறைவு:-** கட்டுமானம் செய்து விற்கப்படும் பொருட்களைத் திறந்து பார்த்தால் பல சமயங்களில் தரம் குறைந்த பொருட்களே இருக்கும்.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**43.அ) மூலதனச் சந்தையின் பல்வேறு பணிகளை விவரிக்க**

சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம் செய்தல்.
நிலை மூலதனம் திரட்டுதல்.
தொழிற்துறை வளர்ச்சியடைதல்.
உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தையிடல்.
செயல்திறனுக்கு நம்பகமான வழிகாட்டுதல்.

**43.ஆ) ஆட்சேர்ப்பின் முறையில் உள்ள புறவளங்களை ஏதேனும் ஐந்து விளக்குக.**

**நேர்முகத் தேர்வு:-** வேலை தேடி வருபவர்களை நேர்முக தேர்வின் மூலம் பணியமர்த்தலாம்.

**வளாகத் தேர்வு:-** கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாக சென்று தகுதியுடையவர்களை தேர்வு செய்யலாம்.

**தொழிற்சாலை வாயிலில் ஆட்சேர்ப்பு:-** பொதுவாக சாதாரண அல்லது தற்காலிக திறனற்ற ஊழியர்கள் இந்த வழியின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றன.

**போட்டி நிறுவனங்கள்:-** உயர் ஊதியம் மற்றும் அதிக பலன்கள் வழங்குவதன் மூலம் போட்டி நிறுவனங்களில் உள்ள திறமையான பணியாளர்களை தம்முடைய நிறுவனத்தில் பணியாற்ற ஈர்க்கும் செயல் பணியாளர் வேட்டை என அழைக்கப்படுகிறது.

**வேலைவாய்ப்பு இணைய தளங்கள்:-** வேலை வாய்ப்பு இணைய தளங்கள் மூலம் தகுதியுடைய பணியாளர்களை உலகளவில் இணையத்தின் வாயிலாக பெறலாம்.

| 44 அ தன்மைகள் | பணச் சந்தை | மூலதனச் சந்தை |
|---|---|---|
| நிதியின் காலம் | ஒரு வருட காலத்திற்குள் அதாவது குறுகிய காலச் சந்தை | ஒரு வருட காலத்திற்கும் மேல் அதாவது நீண்ட காலச் சந்தை |
| வணிக ஆவணங்கள் | வணிக இரசீதுகள், மாற்றுமுறை ஆவணங்கள், கருவூலச் சீட்டு, வணிகத்தாள் போன்றவை | பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், அரசுப் பத்திரங்கள் |
| பண மதிப்பு | ஒரு கருவூல இரசீதின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 1 இலட்சம் வைப்புசான்றிதழ் மற்றும் வணிகத்தாளின் குறைந்தப்பட்ச மதிப்பு ரூ25 இலட்சம் | ஒரு பங்கின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 10 ஒரு கடனீட்டுப் பத்திரத்தின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 100 |
| இடர் அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அதிக அளவு |
| ஒழுங்குபடுத்தும் அமைப்பு | மையவங்கி | மைய வங்கி மற்றும் செபி |

| 44 ஆ அடிப்படை | ஆட்சேர்ப்பு | தேர்ந்தெடுத்தல் |
|---|---|---|
| அணுகுமுறை | நேர்மறையான ஓர் செயல்முறை | எதிர்மறையான ஓர் அணுகுமுறை |
| வரிசை | முதல் படி | இரண்டாம் படி |
| முறை | சிக்கனமான முறை | செலவு மிகுதியான முறை |
| செயல்முறை | மிகவும் எளிதானது | மிகவும் சிரமம் சிக்கலானது |
| காலம் | குறைவான காலம் போதுமானது | அதிக காலம் தேவைப்படும் |

| 45. அ சிறப்பியல்புகள் | பங்கு பரிவர்த்தனை (பங்குச் சந்தை) | பண்டமாற்று பரிவர்த்தனை (பொருட்கள் பரிமாற்றம்) |
|---|---|---|
| பொருள் | பத்திரங்களை வாங்குதல் மற்றும் விற்றல் | பண்டங்கள் வர்த்தகம் செய்யப்படும். |
| பணிகள் | சந்தைப்படுத்துதலை எளிதாக்குகிறது | நீர்மைத் தன்மையை ஏற்படுத்துதல். |
| நோக்கம் | மூலதன உருவாக்கம் | மூலப்பொருள் விற்பனையை அதிகரித்தல். |
| பங்கேற்பாளர்கள் | முதலீட்டாளர்கள் மற்றும் ஊக வணிகர்கள் | தயாரிப்பாளர்கள், முகவர்கள், வியாபாரிகள் மற்றும் ஊக வணிகர்கள். |
| ஒப்பந்தங்களின் காலம் | பதினைந்து நாட்கள் | 2 அல்லது 3 மாதங்கள். |

| 45 ஆ அடிப்படை | பணிவழி பயிற்சி | பணிவழியற்ற பயிற்சி |
|---|---|---|
| விளக்கம் | வேலை சூழலில் வேலையைப் புரிந்து கொள்கிறார் | பணிச் சூழலுக்கு வெளியே பயிற்சியைப் பெறுகிறார். |
| செலவு | செலவு குறைவு | செலவு அதிகம் |
| இடம் | வேலை இடத்திலேயே பயிற்சி | வேலை இடத்திற்கு வெளியே பயிற்சி |
| கோட்பாடு | நிறைவேற்றல் மூலம் கற்றல் | அறிவை பெறுவதன் மூலம் கற்றல் |
| கற்றல் | அறிவை பெறுவதன் மூலம் கற்றல் | அனுபவத்தின் மூலம் கற்றல் |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**46.அ) செபியின் அதிகாரங்களை விவரி**

**பங்குச் சந்தைகள் மற்றும் இடைத்தரகர்கள்:-** வணிக பரிவர்த்தனைகளில் பங்குச் சந்தைகள் மற்றும் இடைத் தரகர் இடமிருந்து தகவல்களை கேட்கலாம்.

**நாணய அபராதங்கள்:-** இடைத்தரகர்களின் வரம்பு மீறலுக்கு நாணய அபராதங்களை விதிக்கலாம்.

**உள்வழி வர்த்தகம்:-** உள்வழி வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்துதல்.

**பத்திரங்கள் ஒப்பந்தசட்டம்:-** பங்குசந்தையில் ஆளும்குழுவில் மூன்றுஉறுப்பினர்களை நியமிக்க முடியும்.

**பங்குச் சந்தை வணிகத்தை ஒழுங்குபடுத்துதல்:-** பங்குச் சந்தையில் உள்ள இடைநிலையர்கள் முறையற்ற வியாபார செயல்பாடுகள் போன்றவற்றை ஒழுங்குப்படுத்துகிறது.

**46.ஆ) மின் சந்தைப்படுத்துதலின் நன்மைகள்:-**

**அனைத்து நேரத்திலும் சந்தை:-** மின் சந்தை வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணி நேரத்திலும் (24 x 7) பயனாளிகளுக்கு சந்தை வசதியை அளிக்கிறது.

**நேரடித் தொடர்பு:-** தயாரிப்பாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே நேரடித் தொடர்பு ஏற்படுவதால் செலவுகள் குறைக்கப்படுகிறது.

**தேவையை பெறுதல்:-** நுகர்வோர் தங்களுக்கு தேவைப்படும் எத்தகைய பொருள்களையும் மற்றும் சேவைகளையும் மின் சந்தையில் பல்வேறு தளங்கள் வலைப்பக்கங்கள் மூலம் பெறலாம்.

**மின் சந்தைப்படுத்துதலின் தீமைகள்:-**

**அதிக செலவு:-** மின் சந்தைப்படுத்துதலின் விளம்பரம் செய்யவும். வணிக தளம் அமைக்கவும், பெரிய அளவில் செலவிட வேண்டும்.

**சிறிய நிறுவனத்திற்கு பொருந்தாது:-** மிக தொலைவில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு பொருள் சேவைகள் வழங்க சிறிய நிறுவனங்களுக்கு மின்சந்தைப்படுத்துதல் பொருந்தாது.

**தகவல்களை புதுப்பித்தல்:-** தகவல்களை அவ்வப்பொழுது புதுப்பிப்பது மிகவும் கடினமான ஒன்றாகும்.

**47.அ) மனித வளத்தின் தனிப்பட்ட சிறப்புயல்புகள் ஏதேனும் ஐந்து விவரி.**

உற்பத்தி செய்யும் ஓரே காரணியாக மனித வளம் திகழ்கிறது.

பிற அனைத்து வளங்களையும் மனித வளம் உருவாக்குகிறது.

மனித வளங்களின் நடத்தைகளை ஊகிக்க முடியாது.

மனித வளங்கள் உணர்ச்சி பூர்வமானவை.

மனித வளங்கள் நகரும் தன்மை கொண்டவை.

**47.ஆ) பொருளாதார அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?**

**முறையான (செம்மையான சந்தை):-** இவ்வகை சந்தையில் ஒரே தன்மைக் கொண்ட பண்டங்கள் மற்றும் பணிகளை ஒரே விதமான விலையில் கையாளப்படுகிறது.

**முறையற்ற அல்லது செம்மையற்ற சந்தை:-** இவ்வகை சந்தை பல்வகைப் பொருட்கள் மற்றும் பல்வேறு விலைகளை கொண்டுள்ளது. ஒரே தன்மை மற்றும் விலை கொண்ட பொருட்கள் இச்சந்தையில் இடம் பெறாது.

www.Padasalai.Net



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593